17th September 1958]

Drinking Water

*** 243 *Q*.—Sri M. C. MUTHUKUMARASWAMY :** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலுக்கா—நன்னிலம் மேஜர் பஞ்சாயத்து போர்டுக்கு உட்பட்ட மூலமங்கலம் ஆதி திராவிடத் தெருவில் மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் கட்டப்பட்டுள்ள குடி தண்ணீர் கிணற்றை பழுது பார்க்க வேண்டுமென எப்போது மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) மேற்படி வேலை தாமதிக்க காரணமென்ன ?

(ஈ) இதன்மீது தணிக்கை அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Nannilam Panchayat has not passed any resolution in the matter.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

Sri M. C. MUTHUKUMARASWAMY : மூலமங்கலம் ஆதி திராவிட தெருவில் கட்டப்பட்டிருக்கும் கிணற்றை நானே நேரில் போய்ப் பார்த்தேன். அதில் தண்ணீர் இல்லாமலும், ரிப்பேர் செய்யப்படாமலும் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு அதிகமாக குடிஜனங்கள் வசிப்பதால், இனியாவது நடவடிக்கை எடுத்து, கிணற்றை ரிப்பேர் செய்வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எனக்கு வந்த தகவல்களிலிருந்து அங்கிருக்கும் கிணறு நல்ல மாதிரிதான், உபயோகிக்கக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறதாகத் தெரிகிறது.

Madras Farmers' tour

*** 244 *Q*.—Sri N. K. PALANISAMI (on behalf of Sri V. K. Kothandaraman) :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958 ஜூன் மாதத்தில் நமது ராஜ்யத்திலிருந்து அகில இந்திய விவசாய பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம் போனார்களா ?

(ஆ) எவ்வளவு பேர் ?

(இ) இதில் ஹரிஜனங்கள், ஹரிஜனரல்லாதவர்கள் எவ்வளவு பேர் ?

(ஈ) சுற்றுப்பிரயாணம் போகக்கூடியவர்களுக்குச் செலவாகும் பணம் சர்க்காரைச் சேர்ந்ததா அல்லது போகக்கூடியவர்களுடையதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) 323.

(*c*) Particulars are not available.

(*d*) The expenditure is borne by the tourists.

Madras Central Jail

*** 245 *Q*.—Sri K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there were transfers of some officers of Madras Central Jail to other Jails during the months of April and May of 1958; and

(*b*) if so, how many of such officers and to what places?